பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

27 03 2024 6 45

புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது.

2. தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அரசு மத்தியில் அமைய வேண்டும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

3. திமுகவின் வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க தங்கள் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

4. தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்கள் நலனில் அக்கறை உள்ள ஒரே கட்சியாக பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி குஜராத் அணியை 63 ரன் வித்தியாசத்தில் வென்றது.

*------ இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

நாட்டில் 17 மாநிலங்களில் வரும் 19ஆம் தேதி முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன்பிரதேசங்களில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் 102 தொகுதிகளிலும் இன்று மாலையுடன் வேட்புமனு தாக்கல் முடிவுக்கு வருகிறது.

தமிழ்நாட்டில் 39 இடங்களுக்கும், ராஜஸ்தானில் 12 இடங்கள், உத்தரப்பிரதேசத்தில் 8, மத்தியப்பிரதேசத்தில் 6, உத்தராகண்டில் 5, அசாம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 5 இடங்கள், பீகாரில் 4, மேற்குவங்கத்தில் 3, அருணாச்சலப்பிரதேசம், மணிப்பூர், மேகாலயா ஆகிய இடங்களில் தலா 2 இடங்களுக்கும் வேட்புமனு தாக்கல் இன்று முடிவடைகிறது.

சத்தீஸ்கர், மிசோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா, அந்தமான் நிகோபார், ஜம்மு-கஷ்மீர், லட்சத்தீவு, புதுச்சேரி ஆகியவற்றில் தலா ஒரு இடத்திற்கும் வேட்புமனு தாக்கல் இன்றுடன் முடிவடைகிறது.

வேட்புமனுக்கள் பரிசீலனை நாளை நடைபெறும். மனுக்களை திரும்பப் பெற வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

<<<<>>>>

முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் பீகார் மாநிலத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய நாளை கடைசி நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலில் இரண்டாம் கட்ட வாக்குப்திவு நடைபெறும் 89 தொகுதிகளுக்கு நாளை தேர்தலுக்கான அறிவிக்கை வெளியிடப்பட உள்ளது.

<<<<>>>>

தமிழக மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அரசு மத்தியில் அமைய வேண்டும் என்று திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் தங்களது கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், மாநிலத்தில் தங்கள் கட்சியின் சாதனைகளை மக்கள் புரிந்துகொண்டு வரும் தேர்தலில் தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று தெரிவித்தார்.

மீனவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய பிஜேபி கூட்டணி தவறிவிட்டதாகவும் அவர் கூறினார்.

தங்கள் கூட்டணி மத்தியில் ஆட்சியமைத்தால் சிறுபான்மையினரை பாதிக்கும் சட்டங்கள் ரத்து செய்யப்படும் என்றும், தேசிய நெடுஞ்சாலைகளில் இருக்கும் சுங்கச்சாவடிகள் முற்றிலுமாக அகற்றப்படும் என்றும் தெரிவித்தார்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் வேலைநாட்கள் 100ல் இருந்து 150ஆகவும், ஊதியம் 400 ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் தெரிவித்தார்.

<<<<>>>>

திமுகவின் வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க தங்கள் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

திருநெல்வேலியில் தமது கட்சி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த 3 ஆண்டுகளில் மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டினார்.

நீட் தேர்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக மக்களிடையே அக்கட்சி தவறான வாக்குறுதிகளை அளித்து வருவதாகவும் கூறினார்.

முன்னதாக தூத்துக்குடியில் தமது கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த ஆண்டு புயல் மழையின்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆளும் திமுக அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

அஇஅதிமுக ஆட்சியில் இருந்தபோது தூத்துக்குடிக்கு ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ஸ்மார்ட் சிட்டி திட்டம் கொண்டுவரப்பட்டதாக தெரிவித்தார்.

மக்கள் நலனுக்காக தங்கள் கூட்டணி செயல்படுவதற்கு வாய்ப்பளிக்கும் நோக்கில் வரும் தேர்தலில் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றி மக்கள் நலனில் அக்கறை உள்ள ஒரே கட்சியாக பிஜேபி செயல்பட்டு வருவதாக அக்கட்சியின் மாநில தலைவர் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

கரூர் அருகே தங்கள் கூட்டணி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்கு சேகரித்த அவர், திமுக அறிவித்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றும், 99 சதவீதம் அவற்றை நிறைவேற்றிவிட்டதாக கூறுவது குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மக்கள் நலனுக்காக பாடுபடும் பிஜேபிக்கு வரும் தேர்தலில் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கிராமப்பகுதிகள் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான வளர்ச்சி இருக்க வேண்டும் என்ற நோக்கில் பிஜேபி தொடர்ந்து பாடுபட்டு வருவதாக திரு. அண்ணாமலை கூறினார்.

<<<<>>>>

தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிக்கும் வகையில் நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்திலும் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரி மாணவிகள் முதல்முறை வாக்களிக்க உள்ளது குறித்து மகிழ்ச்சி தெரிவித்தனர்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் போட்டியிடும் 5 வேட்பாளர்கள் கொண்ட 7வது பட்டியலை நேற்று வெளியிட்டது.

மயிலாடுதுறை தொகுதியில் ஆர். சுதா அக்கட்சியின் சார்பில் போட்டியிடுகிறார்.

சத்தீஸ்கர் மாநிலத்தின் 4 தொகுதிகளுக்கான வேட்பாளர்களும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை பட்டப்படிப்புகளில் சேர்வதற்கான பொது நுழைவுத் தேர்வுக்கு ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் இம்மாதம் 31ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

நேற்று இதை அறிவித்த பல்கலைக்கழக மானியக் குழுவின் தலைவர் திரு. ஜெகதீஷ்குமார், மாணவர்களின் கோரிக்கையை ஏற்று இந்தக் காலநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகக் கூறினார்.

இதற்கான பொது நுழைவுத் தேர்வு நாடெங்கிலும் உள்ள 380 நகரங்களில் நடைபெறும் என்றும், வெளிநாடுகளில் 26 நகரங்களில் இந்தத் தேர்வு நடைபெற உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

மியான்மர் நாட்டின் இந்திய தூதராக திரு. அபய் தாக்கூர் நியமிக்கப்பட்டுள்ளார்.

-------------

நாடாளுமன்றத் தேர்தலில் அனைவரும் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கி சார் ஆட்சியர் தலைமையில் கல்லூரி மாணவர்கள் பேரணி மேற்கொண்டனர்.

-------------

- தேர்தலில் 100 சதவீதம் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நாகர்கோவிலில் துணை ராணுவப் படையினர் மற்றும் காவல்துறையினர் கலந்துகொண்டு கொடி அணிவகுப்பு நிகழ்ச்சி நடத்தினர்.

\- -------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் சின்னசேலம் பகுதியில் மூத்த வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரில் சென்ற மாவட்ட ஆட்சியர் திரு. ஷ்ரவண் குமார், தேர்தல் திருவிழா அழைப்பிதழைக் கொடுத்து குடும்பத்துடன் வாக்களித்திட வேண்டுகோள் விடுத்தார்.

-------------

காஞ்சிபுரம் மாவட்ட காவல்துறை சார்பில் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. க. சண்முகம் கொடியசைத்து தொடக்கி வைத்தார்.

-------------

சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் நாடாளுமன்ற தேர்தலில் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விதமாக ராட்சத பலூனை மாவட்ட ஆட்சியர் பிருந்தா தேவி பறக்கவிட்டார். இந்த பலூனை ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்துச் சென்றனர்.

-------------

<u>*விளையாட்டுச் செய்திகள்*</u>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் சென்னை அணி குஜராத் அணியை 63 ரன் வித்தியாசத்தில் வென்றது.

சென்னையில் நேற்றிரவு நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் களமிறங்கிய சென்னை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 206 ரன் எடுத்தது.

ஷிவம் துபே 23 பந்துகளில் 51 ரன் எடுத்தார்.

அணியின் கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் மற்றும் ரச்சின் ரவீந்திரா தலா 46 ரன் எடுத்தனர்.

207 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 143 ரன் மட்டுமே எடுத்தது.

இன்றிரவு ஏழரை மணிக்கு ஹைதராபாதில் நடைபெறும் ஆட்டத்தில் ஹைதராபாத் - மும்பை அணிகள் மோதுகின்றன.

------------

மியாமி ஓபன் டென்னிஸ் அரை இறுதிக்கு ரோஹன் போபன்னா – மேத்யூ எப்டன் இணை முன்னேறியுள்ளது.

நேற்றிரவு நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் நெதர்லாந்தின் **Sem Verbeea –** ஆஸ்திரேலியாவின் ஜான் பேட்ரிக் ஸ்மித் இணையை 3-4, 7-5, 10-7 என்ற செட் கணக்கில் இந்திய-ஆஸ்திரேலிய இணை தோற்கடித்தது.

**<<<<The End>>>>**